2020 செப்டம்பர் 16] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

நிறுவனம் புதியதொரு பரிமாணத்துடன் மென்மேலும் சிறப்புடன் செயல்பட்டு, தமிழ்நாட்டிலிருக்கும் மக்களுக்கு மேன்மைகளையும், பெருமைகளையும், வளங்களையும் பெற்றுத் தர ஏதுவாக இச்சட்டமுன்வடிவிற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் நல்லாதரவையும், மெட்ராஸ் பொருளாதாரப் பள்ளி நிறுவனத்திற்கு இம்மாமன்றத்தின் மனமார்ந்த வாழ்த்துகளையும் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். 35 சதவிகிதம் என்பது தமிழ்நாடு மாணவர்களுக்கு reservation. எஞ்சியிருக்கின்ற இடங்களுக்கு அனைவரும் போட்டியிடலாம், அவர்களுக்கும் வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

5. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

(எ) ஜாக்டோ-ஜியோ அமைப்பைச் சேர்ந்த ஆசிரியர்கள்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைக் (17(b) charges) கைவிடுதல் மற்றும் NRM பணியாளர்களை நிரந்தரமாக்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், சொல்லுங்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதே மணி 2-30 ஆகிவிட்டது. நீங்கள் கிளம்பிவிடுவீர்களோ, நான் கிளம்பிவிடுவேனோ தெரியாது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு முக்கியமான செய்தியைக் கொண்டு வருகிறேன். மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு. செங்கோட்டையன் அவர்களும் இருக்கிறார்கள். ஜாக்டோ–ஜியோ அமைப்பைச் சேர்ந்த ஆசிரியர்கள் strike செய்தார்கள் என்பதற்காக 5,000 ஆசிரியர்கள்மீது 17(b) charges போட்டு, payment கொடுக்காமல் வைத்திருக்கிறீர்கள். மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு. செங்கோட்டையன் அவர்கள் மிகவும் நல்ல மனிதர். அதுபோல் செய்யக்கூடியவரல்ல. 1977–லிருந்து எனக்கு அவரைத் தெரியும். ஆனால், எப்படி இதைச் செய்தார்கள் என்பது எனக்குப் புரியவில்லை. 17(b) charges போட்டோமென்றால் என்ன ஆகும் என்பது எனக்கும் தெரியும். அவ்வளவுதான் அவர்களது வாழ்க்கை. அதோடு முடிந்துவிடும். ஏனென்றால், P&AR Department அமைச்சர் பதவியையும் நான் வகித்திருக்கிறேன். ஆகையினால், மாண்புமிகு முதல்வர் அவர்கள் கனிவோடு பார்த்து, தயவுசெய்து உடனடியாக இந்தக் குற்றச்சாட்டுகளையெல்லாம் இரத்து செய்து அவர்களுக்கு வாழ்வளிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. துரைமுருகன்] [2020 செப்டம்பர் 16

இரண்டாவதாக, நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் நான் கேட்பது, PWD NMRs-ஐ நிரந்தரமாக்க வேண்டும். அவர்களுக்கு consolidated pay கொடுத்திருக்கிறோம் என்று சொல்லி வருகிறீர்கள். இருந்தாலும், அதைத்தான் திரும்பத் திரும்பக் கேட்கிறேன். (குறுக்கீடு) படிப்படியாக வேண்டாம். உடனடியாக நிரந்தரமாக்குங்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிலே பல பிரச்சினைகள் இருக்கின்றன. ஒதுக்கீடுகள் எல்லாம் இருக்கின்றன. Communal roster-ஐக் கடைப்பிடிக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதற்குத் தக்கவாறு பணி ஆணைகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஏற்கெனவே பணிபுரிந்திருக்கலாம்; அந்த அடிப்படையிலேதான் பணி ஆணைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இல்லையென்றால் நீதிமன்றத்திற்குச் சென்று விடுவார்கள்.

13. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—

தொடர்ச்சி

(இ) தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமை (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2020-தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2-ல் திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.